# நெடுஞ்சாலைத் துறை

## மக்கள் சாசனம்

தமிழ்நாடு அரசு

2016 – 2017

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

# மக்கள் சாசனம்

## 1. முன்னுரை

இந்த சாசனமானது தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறையால் இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்படும் உறுதிப்பாட்டு அறிக்கையாகும்.

மேம்படுத்தப்பட்ட சாலைப் பராமரிப்பின் மூலம் வாகன இயக்க செலவை குறைத்திடுதல், விபத்துக்களை குறைத்திடுதல், மாநிலங்களுக்கு இடையேயும் மற்றும் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும் சாலை வசதி ஏற்படுத்தி விரைவான போக்குவரத்தை உறுதி செய்தல் போன்ற நடவடிக்கைகள் எங்களது குறிக்கோளாகும்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் தமிழ்நாட்டின் சிறுதுறைமுகங்களை நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) தேவையான நிலக்கரியை எடுத்து வருவதற்காக நிறுவப்பட்டது. இது நாட்டிலேயே மாநில அரசால் நிர்வகிக்கப்படும் ஒரே கப்பல் நிறுவனம் ஆகும்.

## 2. எங்களின் கொள்கை

சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், அனைத்து இடங்களை இணைக்கும் வகையிலும், திறனான மற்றும் பாதுகாப்பான பயணத்திற்கு ஏற்ற சாலைகளை அமைத்து மாநிலத்தின் அனைத்து தரப்பு மக்களின் மற்றும் பகுதிகளின் சமநிலை சமூக ï பொருளாதார வளர்ச்சியினை அடைய உதவுவதே நெடுஞ்சாலைத்துறையின் கொள்கையாகும்.

## 3. எங்களது இலக்கு

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பின்வரும் குறிக்கோள்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

அ) மாநிலத்திலும் மற்றும் நாட்டின் பிறபகுதிகளையும் திறனான சாலைகள் மூலம் இணைப்பதன் வாயிலாக தங்குதடையற்ற மற்றும் குறைவான செலவில் போக்குவரத்தை உறுதி செய்தல்.

ஆ) அனைத்து கிராமங்களுக்கு சாலை வசதி அளிப்பதன் மூலம் அவர்களது பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவித்தல்.

இ) தொலைநோக்கு திட்டம் 2023இல் குறிப்பிடப்பட்ட மேம்பாட்டு திட்டங்களை நிறைவேற்ற உதவுதல்.

ஈ) நெடுஞ்சாலைத் துறையின் பொறுப்பில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பாதுகாத்தல். பொது மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் அனுமதியற்ற

ஆக்கிரமிப்புகளை விழிப்புடன் அகற்றி இணக்கமான போக்குவரத்து சூழலை உறுதி செய்தல்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் முக்கிய இலக்கு துறைமுகங்களின் வளர்ச்சி மற்றும் மாநிலத்தின் தொழிற்சாலை வளர்ச்சியின் தேவையை கருத்திற்கொண்டு அதை அடைய உதவுதல் ஆகும். தமிழக அரசு பொது – தனியார் பங்கேற்பு மூலம் சிறு மற்றும் நடுத்தர துறைமுகங்களை மேம்படுத்த முடிவு செய்துள்ளது.

## 4. முக்கிய நடவடிக்கைகள்

### 4.1. நெடுஞ்சாலைத்துறை

நெடுஞ்சாலைத்துறையானது பல்வேறு சாலை உட்கட்டமைப்பு திட்டங்களான சாலை அகலப்படுத்துதல் அல்லது மேம்படுத்துதல், புதிய புறவழிச்சாலைகள் / வட்டச்சாலைகள் அமைத்தல், ஆற்றுபாலங்கள் கட்டுதல், சாலை இணைப்புகளில் மேம்பாலம் கட்டுதல் மற்றும் இரயில்வே கடவுகளில் மேம்பாலம் / கீழ் பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகளை பொது மக்களின் வசதியான மற்றும் நிறைவான பயண வசதிகளுக்காக செயல்படுத்தி வருகிறது.

வளர்ந்து வரும் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்க வேண்டியுள்ளது. தொழில்மயமாக்கல் மற்றும் நகரமயமாக்கல் காரணமாக பன்மடங்கு அதிகரித்துள்ள போக்குவரத்திற்கேற்ப சாலைகளின் திறன் உயர்த்தப்பட்டு வருகிறது. இத்துறை, ஏற்கெனவே உருவாக்கப்பட்ட சாலை உட்கட்டமைப்புகளை

பாதுகாக்கவும், பராமரிக்கவும் புதிய உட்கட்டமைப்புகளை உருவாக்கவும் பின்வரும் திட்டங்களை செயலாற்றி வருகிறது.

அ) ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளின் ஓடுதளத்தின் தரத்தை மேம்படுத்துதல், அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்.

ஆ) புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலைநிதித் திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்துதல் / மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்.

இ) சாலையில் நிகழும் விபத்துகளை குறைக்க பல்வேறு திட்டங்களின் கீழ் சாலை பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.

ஈ) பகுதி–II திட்டத்தின் கீழ் பாலங்கள் கட்டடங்கள் கட்டுதல், புதுமையான பணிகள் மற்றும் ஆராய்ச்சி பணிகள் செய்தல்.

உ) போக்குவரவு மற்றும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம் மூலம் சாலைகள், பாலங்கள், மேம்பாலங்கள் மற்றும் பாதசாரிகளுக்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

ஊ) நிதி பகிர்மான முறையில், இரயில்வே பணித்திட்டத்தின் கீழ் இரயில்வே கடவுகளில் சாலை மேல் / கீழ் பாலங்கள் அமைத்தல்.

எ) நபார்டு வங்கி கடன் உதவி திட்டத்தின் மூலம் சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல்.

ஏ) முக்கிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலை குறைக்க புறவழி சாலைகள் / வட்ட சாலைகள் அமைத்தல்.

பல்வேறு திட்டங்களை செயல் படுத்துவதற்கான கால அளவு, திட்டத்தின் சிக்கலான தன்மை மற்றும் பணிகளை செயல்படுத்தும் போது எதிர் கொள்ளப்படும் சவால்கள் ஆகியவற்றை பொறுத்து, **6** மாதங்கள் முதல் சில வருடங்கள் வரை தேவைப்படுகிறது.

சிக்கலான பணிகளில், பிற துறைகளின் அனுமதி/ ஒப்புதல்கள் தேவைப்படும் ஒவ்வொரு நிகழ்வும், பணியினை செயலாக்குவதற்கான காலம் மற்றும் செலவை அதிகப்படுத்தும் காரணியாக அமைகிறது. முக்கிய திட்டங்களை செயலாக்கும் போது பின்வரும் குறிப்பிட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

1. இரயில்வே கடவுகளுக்கு பதிலாக மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள் கட்டும் திட்டங்களில், பணிகளின் கருத்துரு நிலையிலேயே இரயில்வே துறையின் ஒப்புதலை பெறவேண்டியுள்ளது.
2. தேசிய நெடுஞ்சாலை/ தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பிலுள்ள சாலைப் பகுதிகளில் பணிகளை செயலாக்க மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின்

தடையின்மை சான்று/ அனுமதி பெறவேண்டியுள்ளது.

3. பணிக்கு தேவையான நிலத்தை கையகப்படுத்தும் பணி மிகவும் சவால் மிகுந்ததாகவும், வருவாய்துறையினருடன் ஒருங்கிணைந்தும் செயல்படுத்த வேண்டியுள்ளது. நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தினை நாடும்போது, காலதாமதம் ஏற்படுகிறது.

4. பொது பயன்பாட்டு சாதனங்களான குடிநீர் குழாய், கழிவுநீர் குழாய்கள், மின் மற்றும் தொழில் தொடர்பு வடங்கள், மின் கம்பங்கள், பேருந்து நிழற் குடை போன்றவற்றை இடம் மாற்றம் செய்வதற்காக கூடுதல் நிலம், கூடுதல் காலம் மற்றும் கூடுதல் தொகையுடன் கையகப்படுத்த வேண்டியுள்ளது.

5. திட்டங்கள் தயாரிக்கும் நிலையில் பூமிக்கு அடியில் உள்ள அனேக பயன்பாட்டு சாதனங்கள் துல்லியமாக கண்டறிய முடிவதில்லை. சில சமயங்களில் பயன்பாட்டு சாதனங்களை வேலை துவங்கிய பின்பே துல்லியமாக கண்டறியும் நிலை உள்ளது. மேலும் பயன்பாட்டு சாதனங்களை கண்டறிந்த பிறகு அதற்கும் சேர்த்து நிலம் கையகப்படுத்தும் பணி துவங்க வேண்டியுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி, பயன்பாட்டு சாதனங்கள் கண்டறியப்பட்டபின் சம்மந்தப்பட்ட

துறைகளின் தேவைகளின் படி செய்யப்படுவதால் வேலைகளை நிறைவேற்றுவது தாமதப்படுகிறது.

6. சென்னை மெட்ரோ இரயில் பணி, பொதுப்பணித்துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் போன்ற இதர துறைகளின் பணிகள் திட்ட பணி இடத்திலேயே நடைபெறுவதால் உண்டாகும் கூடுதல் சிரமங்கள்.

7. நகரங்களில் நெரிசலான பகுதிகளில், பணிகளை செயலாக்கும்போது, பணிக்கு தேவையான நிலத்தினை அளிக்க போக்குவரத்தை மாற்றியமைத்தல் உள்ளிட்ட போக்குவரத்து மேலாண்மை சுமை ஏற்படுகிறது.

8. நகரங்களில் இரவு நேரங்களில் மட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், பணி நேரம் குறைக்கப்பட்டு திட்டங்கள் முடிவுறுவதை தாமதிக்கின்றன.

9. மேலே குறிப்பிட்டுள்ள இடர்பாடுகளால் சில பணிகளை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள ஒப்பந்ததாரர்கள் யாவரும் முன் வருவதில்லை ஆதலால் ஒப்பந்தப்புள்ளி பலமுறை கோரப்பட்டும் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட முடியாமல், திட்டப்பணிகள் செயலாக்கத்தில் தாமதம் ஏற்படுகிறது.

10. பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி, கடலோர ஒழுங்குமுறை மண்டலம், அறிவிக்கப்பட்ட வனவிலங்கு பகுதிகளில் செயலாக்கப்படும் பணிக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அனுமதி பெறவேண்டியுள்ளது, இது கடினமான மற்றும் அதிக நேரம் எடுத்துக்கொள்ளும் செயலாகும்.

இருப்பினும், தீவிர முயற்சிகள் மற்றும் கண்காணிப்பு மூலம் இடையூறுகளை களைந்து பணிகளை துரிதமாக செயல்படுத்தி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது சேவைகளை மாற்றியமைத்தல், தேவையான தடையின்மை சான்று பெறுதல், பணிக்கு தேவையான நிலம் கையகப்படுத்துதல் ஆகியவற்றை முடித்து திட்டத்தை (பணியின் அளவு மற்றும் சிக்கலான தன்மையை பொறுத்து) செயலாக்குவதற்கு தேவையான பொதுவான கால அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| சாலைப்பணிகள் (சிறுபாலங்கள் மற்றும் பாதுகாப்புப் பணிகள்) | : 6 மாதம் முதல் 2 வருடம் வரை |
| பாலப்பணிகள் | : 1 வருடம் முதல் 3 வருடம் வரை |

தேவையான ஒப்புதல்களை பெற்றபின், சில முக்கிய இடர்பாடுகள் கொண்ட திட்டங்களை செயலாக்குவதற்கு தேவையான தோராயமான கால அளவு மேலும் அதிகரிக்கலாம்.

## 4.2. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

கடல்சார் வாரியம் பின்வரும் குறிக்கோள்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

அ) சரக்குகளை கையாளுவதற்கு தேவையான பிரத்தியேக துறைமுக வசதிகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் துறைமுகம் சார்ந்த நிறுவனங்களான அனல்மின் நிலையம், உரத்தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் போன்ற தொழிற்சாலைகளை நிறுவ வசதியளித்தல் / ஊக்குவித்தல்.

ஆ) தமிழ்நாட்டில் மையப்பகுதியிலும், மேற்குப் பகுதிகளிலும் அமைந்துள்ள மாவட்டங்களிலுள்ள தொழிற்சாலைகளுக்கு துறைமுக இணைப்பு ஏற்படுத்துதல்.

இ) தமிழ்நாட்டிலுள்ள பெருந்துறைமுகங்களின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல்.

ஈ) கடல்வழி கப்பல் போக்குவரத்தை மேம்படுத்துவதன் மூலம் சாலை மற்றும் இரயில் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்தல்.

உ) சர்வதேசத் தரம் வாய்ந்த கடல்சார் பயிற்சியளித்தல்.

துறைமுகம் சார்ந்த தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தனியார் முதலீட்டு தோணித்துறை கட்டுவதற்கும், அதன் தொடர்புடைய வசதிகளை ஏற்படுத்தவும் தேவையான இடத்தை ஒதுக்கீடு செய்து தோணித்துறை கட்டுமானத்தில் தனியாரை அனுமதிப்பதற்கு தமிழக அரசு

முடிவு செய்துள்ளது. கடலோர பகுதிகளில் துறைமுக வசதி தேவைப்படும் தனியார் நிறுவனங்களுக்கு தனியார் முதலீட்டு தோணித்துறை மற்றும் வணிக ரீதியான தோணித்துறை உருவாக்கத் தேவையான இட வசதியளித்தல் ஆகியவை கடல்சார் வாரியத்தின் முக்கிய குறிக்கோள்கள்.

நாகப்பட்டினம் அரசு துறைமுகத்தில் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் தங்களது நரிமணம் சுத்திகரிப்பு ஆலையின் டீசல் மற்றும் நாப்தாவினை கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்து வருகின்றன. மேலும், சமையல் எண்ணெய், கச்சா எண்ணெய் மற்றும் பொது சரக்குகளும் இத்துறை முகத்தில் அவ்வப்போது இறக்குமதியும் செய்யப்படுகிறது. சிறு கலன்கள் பாம்பன் கால்வாயை கடப்பதற்கு வழிகாட்டப்படுகின்றன. கன்னியாகுமரி மற்றும் இராமேசுவரத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காக படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது.

தனியார் முதலீட்டு துறைமுகங்கள், தனியார் நிறுவனங்களால் அவர்களின் தேவைகளுக்காக இயக்கப்படுகின்றன. இந்த துறைமுகங்களின் மொத்த உட்கட்டமைப்பு வளர்ச்சி அந்த நிறுவனங்களின் பொறுப்பை சார்ந்தது.

## 4.3. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

இந்திய நிலக்கரி நிறுவனங்களால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிலக்கரியை ஹால்டியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களுக்கு கழகத்தின் சொந்த மற்றும் வாடகை கப்பல்கள் மூலம் கொண்டு வந்து இறக்குவதே பூம்புகார் கப்பல் கழகத்தின் முக்கிய பணியாகும்.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திடம் சுமார் **45000** மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள மூன்று சொந்தக் கப்பல்கள் முறையே எம்.வி.தமிழ் அண்ணா, எம்.வி. தமிழ் பெரியார் மற்றும் எம்.வி. தமிழ் காமராஜ் ஆகியவை உள்ளன. மேலும், தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தேவைக்கேற்ப **8** முதல் **9** கப்பல்கள் வரை தனியார் கப்பல் நிறுவனங்களிடமிருந்து வாடகைக்குப் பெற்று பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல்மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்துடன் (NTECL) ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி, அந்நிறுவனத்தின் வல்லூர், வட சென்னையில் அமைந்துள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி

முழுவதையும் பாரதீப் மற்றும் தம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மூலமாக எடுத்துவரும் பணியினை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மேற்கொண்டுள்ளது.

இக்கழகமானது, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் (NTECL) ஆகியவற்றிற்கு நிலக்கரி எடுத்துவரும் பணி தவிர, குமரிமுனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு நாட்டின் பிற பகுதிகளிலிருந்து மற்றும் பிற நாடுகளில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்காக பயணிகள் படகுப் போக்குவரத்தினையும் நடத்தி வருகிறது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு சொந்தமான கப்பல்கள் முறையே எம். வி. தமிழ் அண்ணா, எம். வி. தமிழ் பெரியார் மற்றும் எம். வி. தமிழ் காமராஜ் அனைத்திற்கும் கப்பல்களின் உடற்பகுதி மற்றும் இயந்திர பகுதியில் ஏற்படக்கூடிய சேதங்களுக்கும், போர்காலங்களில் உண்டாகக்கூடிய சேதங்களுக்கும், கப்பலின் பணியாளர்கள் அனைவருக்கும் பி & டி கிளப் காப்பீட்டின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கன்னியாகுமாரி படகு சேவையில் உள்ள படகுகள் முறையே எம். எல். குகன், எம். எல். பொதிகை மற்றும் எம். எல். விவேகானந்தா அனைத்தும் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. கன்னியாகுமாரி படகு சவாரியில் பயணம்

செய்யும் அனைத்து பயணிகளுக்கும் தனி நபர் விபத்து காப்பீடு திட்டத்தில் உள்ளடங்குவர்.

## 5. எங்களது உறுதிமொழிகள்

அ) பொது மக்கள் மற்றும் பணி செயலாக்கத்தில் ஏற்படும் இடருகளை காலதாமதமின்றி நிவர்த்திசெய்தல்.

ஆ) கோரிக்கைகளையும் இன்னல்களையும் புரிந்து கொண்டு உரிய நடைமுறைகளுடன் அணுகுதல்.

இ) ஒரு பொது ஊழியரிடம் மக்கள் எதிர்பார்த்திடும் நேர்மை மற்றும் கடமை உணர்வுடன் செயல்படுதல்.

ஈ) அனைத்து பயனாளிகளின் கருத்துக்களுக்கு உரிய மதிப்பு அளித்து ஒருங்கிணைந்து செயல்படுதல்.

உ) பொதுமக்களின் கருத்துக்களை உரிய முறையில் ஏற்று தேவையான மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்திட நடவடிக்கை எடுத்தல்.

## 6. வெளிப்படைத் தன்மை

துறையின் அனைத்து செயல்பாடுகள் பற்றிய விவரங்களை எளிதில் அறிந்து கொள்ள வசதியாக www.tnhighways.gov.in என்ற இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத்துறையானது, வெளிப்படையான மற்றும் திறனான செயல்பாடுகளுக்காக மின் ஆளுகை (e-governance) நடைமுறைகளை செயல்படுத்தி, துரிதமான மற்றும் தரமான சேவைகளை பொது மக்களுக்கு வழங்கி வருகிறது.

7. வழிகாட்டும் விதித் தொகுப்புகள்

இத்துறையின் அனைத்து செயல்பாடுகளும் கீழ் குறிப்பிட்டுள்ள பல்வேறு சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் கையேடுகள் ஆகியவற்றின் வழிகாட்டுதல்களின்படி நடைபெறுகின்றன.

1. தமிழ்நாடு வரவு செலவு திட்டம் கையேடு.
2. தமிழ்நாடு மாநில மற்றும் சார்பணியாளர் விதிகள்.
3. தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்.
4. தமிழ்நாடு அரசு பணியாளர் நடத்தை விதிகள், 1973.
5. தமிழ்நாடு ஓய்வு ஊதிய விதிகள்.
6. தமிழ்நாடு அரசின் அடிப்படை விதிகள்.
7. தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956.
8. தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்த புள்ளி சட்டம், 1998.
9. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001.
10. தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் நடைமுறை நூல்.
11. தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு.
12. தமிழ்நாடு கணக்கு விதி தொகுப்பு.
13. தமிழ்நாடு கருவூல விதி தொகுப்பு.

14. தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணி விதிகள்.

15. தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் சார் நிலைப்பணி விதிகள்.

16. இந்திய சாலைகள் குழுமத்தின் விதி தொகுப்பு.

17. சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட விவர குறிப்பு.

18. பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையால் வெளியிடப்பட்ட தரப்படுத்தப்பட்ட பணிவிவர தொகுப்பு (Standard Data).

19. தமிழ்நாடு பொதுப்பணித் துறையால் வெளியிடப்பட்டுள்ள செந்தர விலைப்பட்டியல்.

20. தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையால் வெளியிடப்பட்டுள்ள செந்தர விலைப்பட்டியல்.

21. இந்திய தர நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் விவரக் குறிப்பு.

நெடுஞ்சாலை கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் தரத்தை உறுதி செய்யவும், நிலைத்து நிற்கக்கூடிய உள்கட்டமைப்பினை உருவாக்கவும் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இதற்காக மூன்றடுக்கு தரக்கட்டுப்பாடு அமைப்பு துறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்றடுக்கு தரக்கட்டுப்பாடு பரிசோதனையைத் தவிர, அவ்வப்போது எதிர்பாரா ஆய்வு மூலம் தரக்கட்டுப்பாடு பரிசோதனைகள் இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் இணை இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி

நிலையம் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துடன் தரக்கட்டுப்பாடு மேற்பார்வை அமைப்பின்படி பல்வேறு அலகுகளைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர்களால் பணிகளின் தரம் ஆய்வு செய்யப்படுறது.

இந்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் வெளியிடப்படும் விவரக் குறிப்புகள் / வழிகாட்டுதல்கள் / இந்திய சாலைகள் குழுமத்தின் விதித் தொகுப்புகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரைமுறைகளைக் கொண்டு நெடுஞ்சாலைத்துறைப் பணிகள் தொடர்பான அனைத்துச் சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

துறையில் அனைத்து அலகில் உள்ள பொறியாளர்களுக்கு தர மேலாண்மை மற்றும் தரக்கட்டுபாடு குறித்து குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், பணிகளின் திறமையான திட்டமிடல், செயலாக்கம், மேற்பார்வைக்காக இணையதள அடிப்படையிலான இ–பாதை என்னும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இது இத்துறை வெளிப்படையாகச் செயல்பட உதவுகிறது.

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகக் காவல்துறை மற்றும் போக்குவரத்து துறையினரின் ஒத்துழைப்போடு சாலை விபத்து தரவு மேலாண்மைத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது சாலையில் அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகளைக் கண்டறிந்து, ஆய்வு செய்து தகுந்த சாலைப் பாதுகாப்பு தொடர்பான பொறியியல் நடவடிக்கைகளைத் தெரிவு செய்ய உதவுகிறது.

## 8. எங்களது எதிர்பார்ப்புகள்

அ) பொதுமக்கள், சாலை உபயோகிப்போர்கள் மற்றும் அரசு அல்லாத அமைப்புகள் ஆகியோரின் கருத்துக்கள், துறையின் சீரிய செயல்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

ஆ) துறையின் செயல்பாட்டு எல்லைகள் மற்றும் கட்டுப்பாடுகளை மேற்குறிப்பிட்டுள்ளவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

இ) மக்கள் அளித்திடும் ஆதாரங்கள் முழுமையாக உரிய தகவல்களுடன் துறையின் இலக்கை அடைவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.

ஈ) பொருளாதார ஆதாயங்களுக்காக எந்தவொரு தகவலையும் மறைத்திடாமல் எல்லா உண்மை விவரங்களையும் அளித்திட வேண்டும்.

உ) பொதுமக்கள் காலதாமதம் ஏற்படும் வகையில் தூண்டுதலுடனோ அல்லது துறையின் குறிக்கோள் மற்றும் இலக்கினை திசைதிருப்பும் நோக்குடனோ நடந்து கொள்ள மாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊ) துறைக்கு சொந்தமான இடங்களையோ, சாலை ஓரங்களையோ, எவ்வித ஆக்கிரமிப்பும் செய்வதை தவிர்த்து துறைக்கு முழு ஒத்துழைப்பும் துரித போக்குவரத்திற்கு உதவியும் செய்திட முன்வர

வேண்டும். துறையினர், அத்துமீறிய ஆக்கிரமிப்புகளை அகற்றிட முற்படும்போது துறையின் செயலுக்கு பொதுமக்களும் சாலை உபயோகிப்போரும் முழு ஒத்துழைப்பு வழங்கிட முன்வர வேண்டும்.

எ) சாலை உபயோகிப்போர் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்து விபத்துக்களை தவிர்க்க துறை எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும்.

## 9. தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்கள்

நெடுஞ்சாலைத் துறையானது, தலைமை செயலகத்தில் உள்ள நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் தலைமையில் செயல்பட்டுவருகிறது. அவரது தலைமையின் கீழ் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம், முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலை, இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஏழு தலைமைப் பொறியாளர்கள் வெவ்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

மேலும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் தலைமை பொது மேலாளர் அவர்களின் கட்டுபாட்டிலும் தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் செயல் இயக்குநர் தலைமையிலும் தேர்வு செய்யப்பட்ட சாலை மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துகின்றன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் தமிழக அரசின் மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

துறை அமைச்சரின் தலைமையில் தலைமைச் செயலகத்திலுள்ள நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.

துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் கீழ், மாநில துறைமுக அலுவலர், துறைமுக அலுவலர், தலைமை கணக்கு அலுவலர் மற்றும் செயலாளர், செயற்பொறியாளர் (Civil) ஆகியோர் தனிப்பட்ட பணிகளுடன் செயலாற்றி வருகின்றனர்.

பொது மக்கள், தங்களுக்கு தேவைப்படும் விவரங்களை அறிந்து கொள்ளவும், குறைகளை தெரிவிக்கவும், கருத்துக்களை தெரிவிக்கவும், மேம்பட்ட பயனுள்ள சேவைகள் குறித்த கருத்துகளை வழங்கவும் கீழ்கண்ட அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

| வ. எண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலை பேசி எண் |
|---|---|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமை செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை | தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை 600009 | 044–25670959 |
| | நெடுஞ்சாலைத்துறை | | |
| 2 | முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை | ஒருங்கிணைந்த தலைமைப் பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகம், 76 சர்தார்படேல் சாலை, கிண்டி, சென்னை 600025 | 044–22351099 |
| 3 | தலைமைப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு | | 044–22350690 |
| 4 | தலைமைப் பொறியாளர், நபார்டு (ம) கிராமச் சாலைகள் | | 044–22350158 |
| 5 | தலைமைப் பொறியாளர், திட்டங்கள் | | 044–22350655 |
| 6 | தலைமைப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை | | 044–22355701 |
| 7 | தலைமைப் பொறியாளர், பெருநகரம் | | 044–22351154 |
| 8 | தலைமைப் பொறியாளர், திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு | | 044–22352068 |
| 9 | தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் | எண்.171, தெற்கு கேசவ பெருமாள் புரம், TNMB கட்டிடம், பசுமை வழிசாலை, சென்னை 600028 | 044–24950682 |

| வ. எண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலை பேசி எண் |
|---|---|---|---|
| 10 | இயக்குநர்,<br>நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்,<br>76 சர்தார்படேல் சாலை, கிண்டி,<br>சென்னை 600025 | 044–22354852 |
| 11 | திட்ட இயக்குநர்,<br>தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் | எண்.171 தெற்கு கேசவ பெருமாள் புரம்,<br>TNMB கட்டிடம்,<br>பசுமை வழிசாலை,<br>சென்னை 600028 | 044–24954360 |
| 12 | தலைமை பொது மேலாளர்,<br>தமிழ் நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் | எண்.171 தெற்கு கேசவ பெருமாள் புரம்,<br>TNMB கட்டிடம்,<br>பசுமை வழிசாலை,<br>சென்னை 600028 | 044–24952800 |
| 13 | செயல் இயக்குநர்,<br>தமிழ் நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் | எல்.எல்.ஏ கட்டடம்,<br>4வது மாடி, 735,<br>அண்ணாசாலை,<br>சென்னை600002 | 044–28543333 |
| | தமிழ் நாடு கடல்சார் வாரியம் | | |
| 14 | துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் | தமிழ் நாடு கடல்சார் வாரியம்,<br>எண்.171 தெற்கு கேசவ பெருமாள் புரம்,<br>பசுமை வழிச்சாலை,<br>இராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை 600028 | 044–24950420 |

| வ. எண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலை பேசி எண் |
|---|---|---|---|
| 15 | மாநில துறைமுக அலுவலர் | தமிழ் நாடு கடல்சார் வாரியம்,<br>எண்.171 தெற்கு கேசவ பெருமாள் புரம்,<br>பசுமை வழிச்சாலை,<br>இராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை 600028 | 044–24610979 |
| 16 | துறைமுக அலுவலர் கடலூர். | துறைமுக அலுவலகம்,<br>கடலூர் 607003 | 04142–238025 |
| 17 | துறைமுக அலுவலர் நாகப்பட்டினம். | துறைமுக அலுவலகம்,<br>நாகப்பட்டினம் 611001 | 04365–242363 |
| 18 | தலைமை கணக்கு அலுவலர் மற்றும் செயலாளர் | தமிழ் நாடு கடல்சார் வாரியம்,<br>எண்.171 தெற்கு கேசவ பெருமாள் புரம்,<br>பசுமை வழிச்சாலை,<br>இராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை 600028 | 044–24956013 |
| 19 | செயற்பொறியாளர் (Civil) | தமிழ் நாடு கடல்சார் வாரியம்,<br>எண்.171 தெற்கு கேசவ பெருமாள் புரம்,<br>பசுமை வழிச்சாலை,<br>இராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை 600028 | 044–24933883 |

| வ. எண் | அலுவலர் | அலுவலக முகவரி | தொலை பேசி எண் |
|---|---|---|---|
| பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் | | | |
| **20** | நிர்வாக இயக்குநர் | **692**, அண்ணா சாலை, நந்தனம், சென்னை **600035** | **044–24341108** |
| **21** | பொது மேலாளர் (நிதி) (ம) உதவி பொது மேலாளர் (ப & நி) (பொறுப்பு) | **692**, அண்ணா சாலை, நந்தனம், சென்னை **600035** | **044–24330207** |
| **22** | துணைப் பொது மேலாளர் (தொழில் நுட்பம்) | **692**, அண்ணா சாலை, நந்தனம், சென்னை **600035** | **044–24323715** |
| **23** | உதவிப் பொது மேலாளர் (இயக்கம்) | **692**, அண்ணா சாலை, நந்தனம், சென்னை **600035** | **044–24330058** |

இது தவிர தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படி தகவல் அளிக்க நியமிக்கப்பட்ட பொது தகவல் அலுவலர்கள் குறித்த விவரம், துறை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தாமாக முன் வந்து அளிக்கப்பட்ட விவரங்கள் துறையின் இணையதளமான **www.tnhighways.gov.in, www.tnrsp.gov.in, www.tnmaritime.com, www.tamilship.com** இல் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூடுதல் தலைமை செயலாளர்,
நெடுஞ்சாலை மற்றும்
சிறுதுறைமுகங்கள்